

# 16

# அல்குர்ஆன் தொகுக்கப்படல்

அல்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்த காலத்திலேயே அதனைத் தொகுப்ப தற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தமக்கு வஹி வந்த போது அதனைத் தம்மோடு இருந்த தோழர்களிடம் எடுத்துக் கூறினார்கள். தாமும் மனனமிட்டுக்கொண்டு அப்படியே தோழர்களையும் மனனமிடச் செய்தார்கள். அல்குர்ஆன் கட்டம் கட்டமாக அருளப்பட்டமை அதனை மனனமிடுவதற்கு வசதியாக அமைந்தது.

அத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்மீது அருளப் பட்ட வசனங்களை எழுத்துருப்படுத்துவதற்காக சில ஸஹாபாக்களை உத்தியோக பூர்வமாக நியமித்திருந்தார்கள். **குத்தாபுல் வஹீ** (வஹியை எழுதுவோர்) எனப்பட்ட இவர்கள், அவ்வப்போது அருளப்படும் வசனங்களை உடனுக்குடன் பதிந்து கொண்டார்கள். தோல், அகலமான எலும்புகள், பட்டை போன்றன எழுதுவதற்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு அருளப்பட்ட வசனங்கள் எந்த ஸூராவில் எந்த இடத்தில் அமைய வேண்டும் என்பதற்கான வழிகாட்டலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழங்கி வந்தார்கள். இதற்கமையவே அல்குர்ஆன் இன்றும் ஓதப்பட்டு வருகிறது. இந்த ஒழுங்கு ***'தர்தீபுத் திலாவத்'*** (ஓதப்படும் ஒழுங்கு) எனப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது 40ஆம் வயது முதல் மக்காவிலும் மதீனாவிலுமாக சுமார் 23 வருட காலம் அருளப்பட்டு வந்த அல்குர்ஆன் வசனங்கள் அவர்களின் வபாத்தோடு முற்றுப் பெற்றன.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரி 11இல் வபாத்தானார்கள். இதனைத் தொடர்ந்து கிலாபத்தைப் பொறுப்பேற்ற அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் பல போராட்டங்கள் இடம்பெற்றன.

யமாமா யுத்தத்தில் அல்குர்ஆனை மனனம் செய்திருந்த சுமார் எழுபது ஸஹாபாக்கள் ஷஹீதாகினர். எனவே, எஞ்சியுள்ள ஹாபிழ்களும் இவ்வாறு ஷஹீதானால் அல்குர்ஆன் அழிந்து போய்விடுமோ என்ற அச்சம் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்விடயம் தொடர்பாக கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு கலந்தாலோசனை செய்தார்கள். இறுதியில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த கலீபா அவர்கள், அதனை நூலுருப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கலானார்கள்.

அல்குர்ஆனை எழுதுவதற்காக ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது. அக்குழுவிற்குக் குத்தாபுல் வஹியில் இடம்பெற்றிருந்த ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தன் மீது ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை அமானிதமாகக் கருதிய ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பணியை மிக நுணுக்கமாகப் பிழையேதுமின்றிச் செய்து முடித்தார்கள்.

இவ்வாறு தொகுக்கப்பட்ட முதல் மூலப்பிரதி **முஸ்ஹப்** எனப்பட்டது. இதனை அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்வசம் பாதுகாத்து வந்தார்கள். தனது கடைசிக் காலப் பகுதியில் அதனை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவரின் பின்னர் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரபுத் தீபகற்பத்துக்கு வெளியே இஸ்லாம் பரவியது. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இது மேலும் விரிவடைந்தது. அரபு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதோரும் இஸ்லாத்தினுள் நுழைந்தனர்.

இக்காலப்பிரிவில் ஆர்மீனியா-ஆஜர்பைஜான் பிரதேசத்தில் யுத்தம் ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட முஸ்லிம் படையணியைச் சேர்ந்த ஈராக், சிரிய வீரர்கள் தத்தமது மொழி வழக்கிலேயே அல்குர்ஆனை ஓதியதோடு அதுவே சரியானது எனவும் வாதிட்டுக் கொண்டனர்.



பண்டைய கால குர்ஆன் பிரதியொன்றின் பக்கத் தோற்றம்

இதனை அவதானித்த ஹுதைபா இப்னுல் யமானி ரழியல்லாஹு அன்ஹு என்ற நபித்தோழர், அதுபற்றிக் கலீபாவிடம் முறையிட்டு அல்குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் பிளவுபடாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதனை ஏற்ற கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பணியை மேற்கொள்வதற்காக ஒரு குழுவைத் தெரிவு செய்தார்கள். இக்குழுவிற்கும் ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களே தலைவராக நியமிக்கப்பட்டார்கள். இக்குழு ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் இருந்த மூலப் பிரதியைப் பெற்று சரிபார்த்து அதனடிப்படையில் பல பிரதிகளை எழுதியது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பிரதிகள் பிரதான நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. கூடவே, குறைஷியரின் மொழி வழக்கில் நன்கு ஓதத் தெரிந்த காரிகளும் ஹாபிழ்களும் அனுப்பி வைக்கப்பட்டனர். மொழிநடையில் வித்தியாசமாகக் காணப்பட்ட பிரதிகள் ஒன்றுசே ர்க்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன. இதன் மூலம் அல்குர்ஆனின் ஒருமுகத்தன்மை பாதுகாக்கப்பட்டது. இதற்கமைய, உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் **ஜாமிஉல் குர்ஆன்** (அல்குர்ஆன் மூலம் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தியவர்) என்று அழைக்கப் படுகிறார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட பிரதிகள் முஸ்ஹப் உஸ்மானி என அழைக்கப்படுகின்றன. இன்று இதுவே பிரயோகத்தில் இருந்து வருகின்றது.

அல்குர்ஆன் எவ்விதக் குறைபாடுமின்றி நபித்தோழர்கள் காலத்திலேயே நூலுருப் படுத்திப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. குறைஷியரின் மொழிவழக்கில் அல்குர்ஆன் அருளப்பட்டதால், அம்மொழி வழக்கிலேயே அது பதிவு செய்யப்பட்டும் வந்துள்ளது. தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் மட்டுமன்றி மறுமை வரையும் அதனைப் பாதுகாப்பதற்கு அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். பின்வரும் அல்குர்ஆன் வசனம் அதனையே உறுதிசெய்கின்றது.



**பயிற்சி**

***அ*** *பகுதியை* ***ஆ*** *பகுதியுடன் இணைக்குக.*

| அ | ஆ |
|---|---|
| 1. அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு | 1. குத்தாபுல் வஹி |
| 2. அல்குர்ஆனைத் தொகுப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் | 2. பட்டை, அகலமான எலும்பு |
| 3. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இடம்பெற்ற ஒரு யுத்தம் | 3. தர்தீபுத் திலாவத் |
| 4. கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து குர்ஆனின் மூலப்பிரதியைப் பாதுகாப்பாக வைத்திருந்தவர் | 4. யமாமா போர் |
| 5. ஆரம்பத்தில் வஹீ எழுதப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் | 5. உமர் ரழியல்லாஹு அன்ஹு |
| 6. கலீபா அபூபக்ர் காலத்தில் இடம்பெற்ற ஹாபிழ்கள் ஷஹீதான போர் | 6. ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு |
| 7. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புப் பெயர் | 7. முஸ்ஹப் |
| 8. அல்குர்ஆன் தொகுப்பு பற்றி முதலில் கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஆலோசனை கூறியவர் | 8. ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா |
| 9. அல்குர்ஆன் மூலப் பிரதி | 9. ஆர்மீனியா யுத்தம் |
| 10. வஹியை எழுதியோர் | 10. ஜாமிஉல் குர்ஆன் |